**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

O.S. 33/2021

Date :09.02.2026

வா.சா. 1 - சுப்பையா

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனக்கு மலையாளம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணத்தில் பக்கம் 4 மற்றும் 6-ல் மலையாளத்தில் சில வார்த்தைகள் இருக்கிறது. அது என்ன என்று குறிப்பிடுகிறது என்று சொல்லமுடியுமா என்றால் முடியாது. அசல் வழக்கு எண் 44/1121-க்கு தண்டப்பெயர் யார் பெயரில் உள்ளது என்றால் உலகநாதன் பெயரில் உள்ளது. அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தண்ட பெயர் உலகநாதன் பெயரில் இருந்தது என்பதை காட்டும் ஏதாவது ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.11-ஆவணத்தில் பக்கம் 3 -ல் பத்தி 4-ல் மலையாளத்தில் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் என்ன என்று எனக்கு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆகையால் வா.சா.ஆ.11-ல் என்ன விபரம் குறிப்பிட்டுள்ளது என்ற விபரம் என்னால் சொல்லமுடியுமா என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.11-ல் தண்டப்பெயர் அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி நித்திய நெய்வேதிய கட்டளை வகைக்கு என்று மலையாளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி நித்திய நெய்வேதிய கட்டளை என்ற பெயரை மாற்றி அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி நித்திய பூஜை வகைக்கு வேண்டி உலகநாதன் பெயரில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆகையால் வா.சா.ஆ.11 ஆவணத்தில் கூறியிருக்கும் வாசகங்கள் குறித்து முழுமையாக கூற இயலாது என்றால்

புன்னைவனம் பெயரில் பட்டா கொடுக்க கோரி வா.சா.ஆ.11-ன்படி கேட்கப்பட்டுள்ளது. சாட்சி மேற்படி வினாவிற்கு முழுமையாக கூற இயலாது என்று கூறியதாக 3-ம் பிரதிவாதி வழக்கறிஞர் கூறுகிறார். வா.சா.ஆ.11 வழக்கு நான் மேற்படி கூறிய பட்டா தொடர்பான வழக்கா என்றால் ஆம்.

சுப்பிரமணிய புன்னைவனம் எனக்கு என்ன உறவு முறை வேண்டுமென்றால் தெரியாது. வா.சா.ஆ.11 வழக்கின் வாதி புன்னைவனம் என்பவர் புன்னைவனம் ஆண்டபெருமாள் பிள்ளையின் சகோதரர் மகன் என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.11 வழக்கிலும் ஆண்டபெருமாள் அல்லது அவரது குடும்பத்தாரால் அர்ப்பணிக்கப்பட்டதாக எந்த ஆவணங்களும் முன்னிலைப்படுத்தாததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகையால் மேற்படி சொத்து எந்தந நோக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது என்று தீர்மானிக்க முடியாது என்று வா.சா.ஆ.11-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முழுமையான நோக்கம் என்னவென்று இல்லை. ஆனால் நித்திய நிவேத கட்டளைக்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.11-ல் மேற்படி சொத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து எந்த பகுதியும் குடும்பத்தினருக்கு பயன்படுத்துவதற்கு என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்ட பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.11-ல் எங்கு அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி வா.சா.ஆ.11 வழக்கில் தேவஸ்தான போர்டோ அல்லது அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலோ கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி 1121-ம் ஆண்டிலிருந்து தாவா நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஏற்கனவே பட்டா எனது மூதாதையர் பெயரில் உள்ளது. அதனை எனது தந்தை புன்னைவனம் பெயரில் மாற்ற வேண்டி வழக்கு தாக்கல்

செய்துள்ளோம். வா.சா.ஆ.11 வழக்கு வா.சா.ஆ.1ன்தீர்ப்பிற்கான வழக்கில் A குத்தகை ஆவணம் குறித்த வழக்கு என்றால் சரிதான். வா.சா.ஆ.11-ல் பக்கம் 4-ல் கீழிலிருந்து 13-ம் வரியில் மலையாள வாசகம் குறிப்பிட்டு அதன்பின் சொத்தினுடைய வருமானத்தை கொண்டு கட்டளை நடைபெற வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. மலையாள வாசகம் என்னவென்று தெரியாததால் மேற்படி சாராம்சத்தை முழுமையாக கூற இயலாது என்றால் மேற்படி மலையாள வாசகத்தை குறித்து கூற இயலாது. மேற்படி மலையாள வாசகத்திற்கு மொழிப்பெயர்ப்பு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.11-ல் பக்கம் 4-ல் கீழிலிருந்து 18-ம் வரியில் '2nd defendant was in possession for and on behalf of idol and was performing the charity without default and that the plaintiff's family had no right over the property' என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில் 2-ம் பிரதிவாதி சுவாமிக்காக அனுபவித்து வருவதாக தான் துலங்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 வழக்கில் 1-ம் பிரதிவாதி மட்டும் தான் வழக்கை நடத்தி வந்தார். 2-ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினரா இருந்தார் என்றால் சரிதான். ஆகையால் 2-வது பிரதிவாதியின் மகனான வாதியால் திருக்கோவில் சொத்தை அபகரிக்க வேண்டி கூட்டுசேர்ந்து வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. ஆகையால் வா.சா.ஆ.11 வழக்கில் குறிப்பிட்டு என்ன வகையில் அந்த சொத்து அர்ப்பணிக்கப்பட்டது, யாரால் அர்ப்பணிக்கப்பட்டது என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் குறித்து கூறமுடியுமா என்றால் கூற இயலாது. 1978-ல் ரீ சர்வே செய்யப்பட்டு திருக்கோவில் பெயரில் பட்டா ஏற்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எந்த வருடம் எனக்கு தெரியவந்தது என்றால் 2010-ல் எனக்கு தெரியவந்தது. மேற்படி இடத்திற்கு கரத்தீர்வை செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன்.

மேற்படி கரத்தீர்வை ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களது குடும்ப நெய்வேத்திய கட்டளை என்று நான் கூறும் கட்டளைக்கு எத்தனை சொத்துக்கள் என்றால் ஒரே சொத்து தான். அதன் பட்டா எண் என்ன என்றால் 76 ஆகும். வா.சா.ஆ.5-ல் எத்தனை அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 7 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன.

1978-ல் ,இருந்தே பட்டா எண் 76-ல் தான் வழக்கு பட்டிகை சொத்து உட்படுத்தப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 2010-ம் வருடம் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். வா.சா.ஆ.3-ல் மேற்படி பட்டா எண் 76 குறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் அந்த சமயத்தில் பட்டா எண் 76 பற்றி எனக்கு தெரியாது. நித்திய நைவேத்தியம் அருள்மிகு திருச்செந்தூர் சுவாமி திருக்கோவிலில் எத்தனை வருடகாலமாக நடத்தாமல் இருந்து வருகிறது என்றால் 2009 வரை வீட்டில் நடைபெற்றது. 2010 முதல் நடைபெறவில்லை.

நித்திய நைவேத்தியம் என்ன என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். ஒரு ஆளாக்கு அரிசியை அருள்மிகு தசுப்பிரமணிய சுவாமி படத்திற்கு முன்னால் வைத்து கும்பிட்டுவிட்டு தர்மம் செய்து விடுவோம்- வருபவர், போகிறவர்களுக்கு சாப்பாடாக கொடுப்போமா என்றால் ஆம். ஒரு ஆளாக்கு என்பது எவ்வளவு என்றால் உளக்கிற்கு பாதி என்றால் சரிதான். உளக்கு என்றால் 8 உளக்கு சேர்த்தால் ஒரு படி என்றால் சரிதான். வா.சா.ஆ 3 மனுவில் அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய கோவில் நிர்வாக அலுவலர் நிலத்திலிருந்து ஏதாவது வேண்டுமென்றால் படித்தரம் மற்றும் தேவையான அரிசி நெய்வேத்தியத்திற்கு பெற்றுக்கொள்ளலாம் என்று நான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 தாக்கல் செய்யும் சமயத்தில் பட்டா எண் 76 குறித்து எனக்கு தெரியாது என்று மேற்படி சாட்சியத்தில் கூறினேன். ஆனால் வா.சா.ஆ.3-ல் அருள்மிகு

திருந்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி பெயரில் பட்டா இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் கிராம நிர்வாக அலுவலர் சொன்னதன் பெயரில் குறிப்பிட்டுள்ளேன்.

கிராம நிர்வாக அலுவலர் கூறியதா மேற்படி மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கிராம நிர்வாக அலுவலர் அறிவுறுத்தலின்படிதான் வா.சா.ஆ.3 மனு தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டேன் என்றால் தீர்வை செலுத்த சென்ற போது திருச்செந்தூர் தேவஸ்தானம் பெயரை எங்கள் பெயரில் மாற்றினால் தான் செலுத்த முடியும் என்று சொன்னதால் மனு தாக்கல் செய்தேன். 2007-ம் வருடத்திற்கு பின்பு கரத்தீர்வை செலுத்த தேவை இல்லையென்றால் சரியல்ல.

வா.சா.ஆ.3 மனுவும் வட்டாட்சியரால் நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். பின்பு RDO இடம் அனுப்பப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.3-ன்படியான உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் அது மேல்முறையீடு சார் ஆட்சியருக்கு கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.6-ல் 2-வது பத்தியில் வா.சா.ஆ.3 மனு வட்டாட்சியரால் நிராகரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனை மறைத்து தற்போது RDO இடம் மேல்முறையீடு செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3-ன் மீதான உத்தரவில் என்னால் கொடுக்கப்பட்ட ஆவணங்களும், நிராகரித்ததற்கான காரணங்களும் சொல்லப்பட்டிருக்கும். அதனை மறைப்பதற்காக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. மேற்படி RDO உத்தரவையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் RDO இடம் இருந்து எவ்வித உத்தரவும் வாங்கவில்லை.

08.10.2015—ல் மாவட்ட வருவாய் அலுவலர் சீராய்வு மனு மீதான உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தேன்.

அது வா.சா.ஆ.7-WP (MD) No.2377 of 2016, என்றால் சரிதான். மேற்படி மனுவில் எத்தனை சர்வே எண்களுக்கு பட்டா வேண்டுமென்று கேட்டேன் என்றால் ஒரே சர்வே எண் தான். வா.சா.ஆ.7-ல் பல சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டு அதற்கு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்து தர கோரி கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 நிலைக்கத்தக்கல்ல என்று கூறி உரிமையியல் நீதிமன்றத்தை அணுக கோரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.7-ல் அசல் வழக்கு எண் 44/1121 -ன் தீர்ப்பு தாணுமாலையப்பெருமாள் பிள்ளை என்பவருக்கு எதிரான வழக்கு என்றும், தற்பொழுது அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலுக்கு எதிராக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்றும் முன்வழக்கில் மேற்படி கோவில் கட்சி சேர்க்கப்படவில்லை என்பதால் மேற்படி அசல் வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்புகள் மேற்படி திருக்கோவிலை கட்டுப்படுத்தாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.7-ல் வா.சா.ஆ.11 தீர்ப்பையும் நான் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.11 தீர்ப்பு எனக்கு எப்போது தெரியும் என்றால் 2010-ம் வருடத்திற்கு முன்பாகவே தெரியும். வா.சா.ஆ.7—ல் பத்தி 7-ல் மேற்படிதிருக்கோவிலுக்கு கைங்கரியம் செய்து வருவதாக எங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருக்கோவிலில் எந்த கைங்கரியமும் செய்யாமல் கைங்கரியம் செய்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி திருக்கோவிலில் எந்த வருடத்திலிருந்து கைங்கரியம் செய்து வருகிறோம் என்றால் மூதாதையர் காலத்தில் இருந்து செய்து வருகிறோம்.

நான் இந்த வழக்கை உரிமை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வழக்கு பட்டிகை சொத்தின் மதிப்பு என்னவென்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தின் வழிகாட்டு மதிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை வழக்கு பட்டிகை சொத்தின் உரிமை கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் பரிகாரத்தில் உரிமை கேரவில்லை என்றால் பட்டா தான் கேட்டேன். பட்டா வேண்டுமென்று கேட்டுள்ள பரிகாரத்திற்கு மற்றும் பட்டா பெயர் மாற்றம் குறித்த பரிகாரத்திற்கோ தீர்ப்பு வழங்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ.7-ல் எனக்கு உரிமைப்பட்டதாக கோரும் சொத்தினை குறிப்பிட்டு திருக்கோவில் போர்டு வைக்கப்பட்டு சுவாதீனம் எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அருகில் உள்ளவர்கள் நிலம் வைத்திருந்தார்கள். வா.சா.ஆ.7-ல் பத்தி 7-ல் திருக்கோவில் சுவாதீனத்தை எடுத்துள்ளதாகவும் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளதாகவும் பதிவு செய்துள்ளது. என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7-ல் பத்தி 7-ல் திருக்கோவில் சுவாதீனத்தை எடுத்துள்ளதாகவும் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளதாகவும் பதிவு செய்துள்ளதால் சுவாதீனம் திருக்கோவிலால் எடுக்கப்பட்டதன் காரணமாக பட்டா பெயர் மாற்றம் கோரிக்கை ஏற்ககூடியதல்ல என்று மாண்புமிகு தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு சரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தான் மேற்படி வா.சா.ஆ.7-லும் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் SLR, Tax receipt, letter from Arulmigu Tiruchenthur

Temple, Letter from G.P. and two more judgments மற்றும் ஆனால் அது குறியீடு செய்யப்படவில்லை என்பது தற்போது தான் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.4 திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.4-ல் எதற்காக விபரம் தரப்பட்டது மற்றும் என்ன விபரம் என்னால் கேட்கப்பட்டது என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சொத்து அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு உரிமைப்பட்டதா என்று கேட்டேன். மேற்படி வா.சா.ஆ.4-ற்கான மனுவை தாக்கல் செய்யாமல் மேற்படி கேள்விதான் கேட்கப்பட்டது என்று உறுதியாக கூறப்பட்டது என்றால் சரியல்ல.

சொத்தின் உரிமை குறித்த விளம்புகை பரிகாரம் மற்றும் மீட்பு பரிகாரம் கேட்காமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டா பாஸ்புக் சட்டம் பிரிவு 14-ன்படி இவ்வழக்கு நிலைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. திருக்கோவிலுக்கு இவ்வழக்கினால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்திற்கான இழப்பீடுகளைநான் தர கடமைப்பட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.